


# இடம் பொருள் கலைஞர் 82

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம்!**




# அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம்!

## புற்றுநோய்த் தடுப்புக்கு முன்னணி மருத்துவமனை

பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது, அதற்கான சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக அமெரிக்காவுக்குச் செல்ல நேரிட்டது. அங்கே நியூயார்க் 'மெமோரியல் மருத்துவமனை'யில் டாக்டர் மில்லர் என்பவர் அண்ணாவுக்குச் சிகிச்சை அளித்தார். 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சுமார் 60 நாட்கள் வரை அங்கே தங்கியிருந்து சிகிச்சை எல்லாம் முடிந்து, நல்லபடியாக தமிழ்நாட்டுக்குத் திரும்பினார் அண்ணா.

ஆனால், அந்த மகிழ்ச்சி வெகுநாட்களுக்கு நீடிக்கவில்லை. 1969 ஆம் ஆண்டு ஜனவரியில் மீண்டும் அண்ணாவுக்கு வயிற்றில் வலி ஏற்பட்டது. அந்த வேதனையான நாட்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் **'நெஞ்சுக்கு நீதி'** முதல் பாகத்தில் இப்படி விவரிக்கிறார்:

"டாக்டர் மில்லர் அவர்கள் புற்றுநோயை, 'கடல் நண்டு'க்கு ஒப்பிட்டார். அந்தக் கடல் நண்டு அண்ணாவின் மென்மையான உடம்பிற்குள் எத்தனையோ வளைகளை வெளியே தெரியாமல் தோண்டிக் கொண்டிருந்திருக்கிறது. டாக்டர்கள் அதனை 'செகண்டரி' என்று சொன்னார்கள்.




மறுபடியும் தாங்கொணாத வலி அண்ணாவைத் தாக்கத் தொடங்கிற்று. உடனடியாக வேலூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடிவெடுத்தோம். அண்ணா அதற்கு உடன்படவில்லை. "சென்னையில் அரசாங்க மருத்துவமனை இருக்கும்போது, அதை விட்டுவிட்டு வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்குச் செல்வது நாமே நம்முடைய அரசு மருத்துவமனையை மதிக்காதது போல ஆகிவிடும்" என்றார்.

பொதுவாகத் தனியார் துறைகள் தளிர்ப்பதை விட, ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய அரசாங்கத் துறை ஆக்கம் பெறுவதிலேயே அண்ணாவுக்கு அக்கறை மிகுந்திருந்தது என்பதனையே அவருடைய வாதம் புலப்படுத்தியது. ஆயினும், அவருக்கு வந்துற்ற கொடிய நோய்க்குச் சிகிச்சையளித்திட, வேலூரில் சில புதிய கருவிகள் வந்திருப்பதைக் கூறி அங்கே அழைத்துக்கொண்டு சென்றிட முடிவு செய்தோம்."

இங்கே 'புதிய கருவிகள்' என்பதுதான் கவனிக்கத்தக்கது. அண்ணாவின் நிலையைக் கண்டதாலோ என்னவோ, நவீனக் கருவிகள் உள்ள ஆராய்ச்சி நிலையத்தை புற்றுநோய்க்காக ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம், கலைஞர் அவர்களுக்குத் தோன்றியிருக்கலாம். எனவேதான் அண்ணா காலமான பிறகு, அடுத்த மாதமே, அதாவது 1969-ஆம் ஆண்டு மார்ச் 21 அன்று அன்றைய செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் திறக்கப்பட்ட புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்துக்கு அண்ணாவின் பெயரைச் சூட்டித் திறந்து வைத்தார் கலைஞர் அவர்கள்.

### புற்றுநோய் விழிப்புணர்வில் அண்ணாவின் மனைவி!

இந்த புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக, அண்ணாவின் மனைவி, ராணி அண்ணாதுரை அவர்கள் தலைமையில் அமைந்திருந்த பெண்கள் நலக்குழு, தனது உறுப்பினர்களுடனும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மக்கள் நலக்குழு உறுப்பினர்களுடனும் இணைந்து, மருத்துவமனையைச் சுற்றியிருந்த வட்டாரங்களில் புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

அதன் விளைவாக, 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, அந்த நிலையத்தில் 6 ஆயிரத்து 469 பெண்கள் பரிசோதிக்கப்பட்டு, அவர்களில் 70 பேருக்கு கருப்பைப் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களில் 41 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.



**அண்ணாவின் நினைவாகத் தொடங்கப்பட்ட இந்த நிலையம், இன்று மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி என்று வளர்ந்து, கலைஞரின் நினைவையும் சொல்லிக் கொண்டிருக்கிறது!**



### வாய், கருப்பைப் புற்றுநோய் தீர்க்க...

உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அரசால் இந்த நிலையம் தொடங்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்கு, சுமார் ஐந்து லட்ச ரூபாய் செலவானது.

அன்று இந்த நிலையம் கட்டப்பட்டதன் நோக்கமாக, இந்தியாவில் அதிகமாகக் காணப்படும் புற்றுநோய்களான வாய்ப் புற்றுநோயையும், கருப்பையில் வரும் புற்றுநோயையும் கண்டுபிடித்து, சிகிச்சை செய்வது மற்றும் அவை தொடர்பாக ஆய்வு செய்வது ஆகியவை இருந்தன.

அதுதவிர, நகரத்தில் நோய் இருக்கும் அளவைக் கணக்கெடுப்பது, புற்றுநோய் தொடர்பாக, மருத்துவ ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பது போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### நவீன கருவிகள் மூலம் சிகிச்சை

1969-ஆம் ஆண்டு இந்த நிலையம் தொடங்கப்பட்டபோது, 100 படுக்கை வசதிகள் கொண்டதாக இருந்தது. இன்று அது சுமார் 1,000 படுக்கை வசதிகள் கொண்டதாக வளர்ந்திருக்கிறது.

இங்கு கோபால்ட் கதிர்வீச்சு இயந்திரம், ஆரம்பத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது தவிர, வேறு சில நவீன ரக கதிர்வீச்சு இயந்திரங்களும் உள்ளன.

'அறுவை சிகிச்சை', 'கதிர்வீச்சு சிகிச்சை', 'கீமோதெரபி சிகிச்சை'என உலக அளவில் புற்றுநோய்க்கு வழங்கப்படும் சிகிச்சைகள் எல்லாம் இங்கும் அளிக்கப்படுகின்றன. மேலும், புற்றுநோய் சிகிச்சை தொடர்பான 'கதிரியக்க இயற்பியல்' எனும் பட்ட மேற்படிப்பும் இங்கு வழங்கப்படுகிறது.

இந்தக் காரணங்களால் இன்று, தமிழ்நாட்டிலேயே புற்றுநோய்க்குத் தரமான சிகிச்சை வழங்கும் அரசு மருத்துவமனையாக இந்த நிலையம் திகழ்கிறது. அண்ணாவின் நினைவாகத் தொடங்கப்பட்ட இந்த நிலையம், இன்று மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி என்று வளர்ந்து, கலைஞரின் நினைவையும் சொல்லிக் கொண்டிருக்கிறது!

...வலம் வருவோம்

## 'குடிஅரசு' நூற்றாண்டு ஆய்வு நூலகம் திறப்பு!






தமிழ்ச் சமூகத்தின் போக்கைப் புரட்டிப் போட்ட இதழ்களில் ஒன்று 'குடிஅரசு'. பெரியாரின் பேராயுதமான இந்த இதழின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வரும் வேளையில், திராவிடர் விடுதலைக் கழகம் 'குடி அரசு நூற்றாண்டு ஆய்வு நூலகம்' ஒன்றை சென்னையில் அமைத்துள்ளது. மயிலாப்பூர், நடேசன் சாலையில், அம்பேத்கர் பாலம் அருகில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், இந்த ஆய்வு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் சமீபத்தில் இந்த நூலகத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைத்தார்.

'திராவிடம்', 'பெரியாரியம்', 'அம்பேத்கரியம்', 'மார்க்சியம்', 'சூழலியல்', 'வரலாறு', 'சட்டம்' எனப் பல்வேறு தலைப்புகளில் ஐந்தாயிரத்துக்கும் அதிகமாக நூல்கள் இடம்பெற்றுள்ளன. திராவிட இயக்கம் குறித்த ஆய்வுகளுக்குப் பயன்படும் வகையிலான ஆவண நூல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. திராவிட இயக்கம் குறித்த விமர்சனங்கள், அவதூறுகளுக்குப் பதிலளிக்கும் வகையிலான நூல்கள் சேகரிக்கப்பட்டு, ஒரே இடமாக கொண்டுவரப்பட்டுள்ளதால், இந்த நூலகம் சிறப்புப் பெறுகிறது.

பொதுமக்கள் பயன்பாட்டுக்கான நூலகமாக இருந்தாலும், உறுப்பினராகவும் சேரலாம். வாரத்தின் 7 நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை நூல்களை எடுத்து வாசிக்கலாம். உறுப்பினர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்றும் பயன்படுத்தலாம். திராவிட இயக்கத்தின் அறிவுப் பங்களிப்புகளில் நூலகம், வாசிப்பு இயக்கங்கள் பெரும் பணியாற்றியவை. அந்த வகையில், நூற்றாண்டு கண்ட இதழ் பெயரில், அமைக்கப்பட்ட நூலகம், தலைநகரில் கருத்தியல் கருவூலமாகத் திகழட்டும்.

## :.ப்ளாஷ்பேக்

### மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம்!



கரந்தைக் கலைக் கல்லூரி மாணவர் தி.மு.க சார்பில் 1988-ஆம் ஆண்டு, மொழிப் போர்த் தியாகிகள் வீர வணக்க நாளினை ஒட்டி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் எதிரில், இனமானப் பேராசிரியர் அவர்கள் கழக கொடியேற்ற வருகை தந்தார். அப்போது மாணவர் தி.மு.க. செயலராகப் பணியாற்றிய நான், நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தேன். பேராசிரியர் எங்களை ஊக்கப்படுத்திச் சென்றது, மறக்க முடியாத அனுபவம்.

**– முனைவர் இரா.குணசேகரன்,**
**இணை இயக்குநர்(ப.நி),**
**கலை, பண்பாட்டுத்துறை,**
**தஞ்சாவூர்.**


**முனைவர் இரா.குணசேகரன்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வானம்பாடி வளர்ச்சி!

1958-ஆம் ஆண்டு ஜூலை 5-ஆம் தேதி கோவை மாவட்டக் கழகத்தின் '3-வது மாநில மாநாடு' நடைபெற்றது. மாநாட்டில் பேசிய அறிஞர் அண்ணா. "நம்முடைய கழகத்தை எப்படி வீழ்த்துவது என்று அல்லும்பகலும் சிலர் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். நாம் சிறகொடிந்த பறவைபோல, நாமே தத்தி தத்தி நடந்து. இன்று வானத்திலே வட்டமிடுகிற வானம்பாடி போல வளர்ந்திருக்கிறோம். இந்த வளர்ச்சியைத் தடுத்துவிட முடியாது. விறகை எடுத்துவிட்டால், நெருப்பு அணைந்து விடுவதுபோல, ஒரு கட்சி உதவி செய்வதை நிறுத்திவிட்டால், மற்றொரு கட்சி படுத்துவிடும் என்கிற நிலை நமக்கில்லை" என அவர் ஆற்றிய உரை காலாகாலத்துக்கும் நிலைத்து நிற்கிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

570

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131